# எண்ணெய் வித்துக்களுக்கான விலை முன்னறிவிப்பு

## தேங்காய் மற்றும் கொப்பரை

உலகளவில் தேங்காய் உற்பத்தி செய்யும் நாடுகளில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது. வேளாண் மற்றும் உழவர் நல அமைச்சகத்தின் இரண்டாவது முன் கூட்டிய மதிப்பீடுகளின் படி 2019-20 ஆம் ஆண்டில் நம் நாட்டில் தேங்காய் 2.11 மில்லியன் ஹெக்டரில் 14.94 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இந்தியாவில் தேங்காய் உற்பத்தியில் கேரளாவுக்கு அடுத்தபடியாக, தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் உள்ளது, மேலும் இது பரப்பளவில் 19 சதவீதமும் உற்பத்தியில் 24 சதவீதமும் பங்களிக்கிறது. தமிழ்நாட்டில், கோயம்புத்தூர், தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, கன்னியாகுமரி, வேலூர், ஈரோடு, தேனி மற்றும் கிருஷ்ணகிரி ஆகியவை தேங்காய் உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்களாகும்.

பெருந்துறை சந்தைக்கு பெரும்பாலான கொப்பரை வரத்தானது கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், மதுரை, விழுப்பிரம், பொள்ளாச்சி, பட்டுக்கோட்டை, பேராவூரணி மற்றும் மைசூர் (கர்நாடகா) ஆகிய பகுதிகளிலிருந்து வருகிறது. புதிய வரத்தானது மார்ச் முதல் ஏப்ரல் மாதங்களில் மாநிலங்களின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், கேரளா மற்றும் கர்நாடகாவிலிருந்தும் வர தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சாதகமான பருவ மழை காரணமாக தேங்காய் உற்பத்தி செய்யப்படும் முக்கிய மாவட்டங்களில் விளைச்சல் நன்றாக உள்ளது. உற்பத்தி நன்றாக இருந்தபோதிலும், கோவிட் பெருந்தொற்று காரணமாக தேங்காயின் தேவை நிலையானதாக இருந்ததால் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு விலை குறைவாக உள்ளது.

இச்சூழலில், விவசாயிகள் விற்பனை முடிவுகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டு திட்டத்தின் கீழ் இயங்கி வரும், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டம், கடந்த 21 ஆண்டுகளாக ஈரோட்டில் உள்ள அவல் பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடம் மற்றும் பெருந்துறை வேளாண் உற்பத்தி கூட்டுறவு விற்பனை மையத்திலும் நிலவிய தேங்காய் மற்றும் கொப்பரை விலை மற்றும் சந்தை

ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. ஆய்வு முடிவின் அடிப்படையில் பிப்ரவரி முதல் மார்ச் 2022 வரை தரமான தேங்காயின் பண்ணை விலை கிலோவிக்கு ரூ.26 முதல் ரூ 28 வரை இருக்கும் மற்றும் நல்ல தரமான கொப்பரை கிலோவுக்கு ரூ.90 முதல் ரூ.95 வரை இருக்கும் என அறியப்படுகிறது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விற்பனை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**எள்**

வேளாண் மற்றும் உழவர் நல அமைச்சகத்தின முதலாவது முன் கூட்டிய மதிப்பீடுகளின் படி, இந்தியாவில் 2020-21–ஆம் ஆண்டு, காரிப் பருவத்தில் 6.72 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது, இது கடந்த வருடத்தை காட்டிலும் 2.28 சதவீதம் அதிகமாகும். மத்தியப்பிரதேசம், உத்திரப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், ராஜஸ்தான், குஜராத், மகாராஷ்டிரா, ஒடிசா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு உள்ளிட்ட நாட்டின் மத்திய மற்றும் தென் பகுதிகளில் பெருவாரியாக காரீப் பருவத்தில் எள் பயிரிடப்படுகிறது. 2019-20 ஆம் ஆண்டில் தமிழகத்தில் எக்டருக்கு 688 கிலோ உற்பத்தி திறனுடன் 53010 எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 36470 டன் எள் உற்பத்தி செய்யப்பட்டது. தமிழகத்தில் பெரும்பாலும் கோடை பயிராக நீர் ஆதாரம் உள்ள இடங்களில் எள் பயிரிடப்படுகிறது.

வர்த்தக மூலங்களின்படி, தமிழகத்திற்கு எள் வரத்தானது, குஜராத், ஆந்திர பிரதேசம், இராஜஸ்தான் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களிலிருந்து வருகிறது. தமிழ்நாட்டில், கார்த்திகை பட்டம், தைப்பட்டம் மற்றும் மாசிப்பட்டத்தின் போது எள் விதைக்கப்படுகிறது. வர்த்தக ஆதரங்களின் படி, டி.எம்.வி-3மற்றும் டி.எம்.வி-4 ஆகிய எள் வகைகள் பெரும்பாலும் ஈரோடு வட்டாரங்களில் பயிரிடப்படுகிறது. சிவப்பு எள் அதிக பரப்பளவில் பயிரிடப்பட்டாலும் கருப்பு மற்றும் பழுப்பு என அனைத்து எள் வகைகளும் எண்ணெய் பிரித்தெடுப்பதற்காக பயன்படுத்தப்படுகிறது.

இச்சூழலில், விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை

முன்னறிவிப்புத் திட்டம் கடந்த 21 ஆண்டுகளாக ஈரோட்டில் உள்ள சிவகிரி ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய எள் விலை மற்றும் சந்தை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், நல்ல தரமான எள்ளின் விலை பிப்ரவரி முதல் மார்ச் 2022 வரை ஒரு கிலோவிற்கு ரூ.98 முதல் ரூ100 இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப் படுகின்றனர்.

**நிலக்கடலை**

வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகத்தின் முதல் முன் கூட்டிய மதிப்பீடுகளின் படி, 2019-2020 ஆம் ஆண்டு காரீப் பருவத்தில் இந்தியாவில் 63.11 இலட்சம் டன்கள் நிலக்கடலை உற்பத்தி செய்யப்படும் என கணிக்கப்பட்டுள்ளது. இது கடந்த வருடத்தை காட்டிலும் 1.24 சதவீதம் அதிகமாகும். இந்தியா 2019-2020 ஆம் ஆண்டு ரூ.5096.39 கோடி மதிப்பிலான 6.64 இலட்சம் டன் நிலக்கடலையை இந்தோனேசியா, வியட்நாம் மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தது. குஜராத், ஆந்திர பிரதேசம், இராஜஸ்தான், கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிரா ஆகியவை நிலக்கடலை உற்பத்தி செய்யும் முக்கிய மாநிலங்களாகும். இம் மாநிலங்கள் ஒன்றிணைந்து நாட்டின் மொத்த உற்பத்தியில் 89 சதவீதம் பங்களிக்கிறது.

தமிழ்நாடு பருவம் மற்றும் பயிர் அறிக்கையின் படி, தமிழ்நாட்டில் 2019-20 ம் ஆண்டில் நிலக்கடலை 3.46 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டு 10.33 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் கடலூர் ஆகியவை நிலக்கடலை பயிரிடப்படும் முக்கிய மாவட்டங்களாகும். இந்த மாவட்டங்களில் பெரும்பாலும் ஜூலை முதல் ஆகஸ்ட் (ஆடி பட்டம்), ஜனவரி முதல் பிப்ரவரி (தை பட்டம்) மற்றும் மே முதல் ஜூன் வரை(வைகாசி பட்டம்) நிலக்கடலை விதைக்கப்படுகிறது. வர்த்தக மூலங்களின்படி, கடந்த பருவத்தில் நல்ல விலை கிடைத்ததால் பெருவாரியாக நிலக்கடலை பயிரிடப்படும் மாவட்டங்களில் பரப்பளவு அதிகரித்துள்ளது. டி.எம்.வி-10 மற்றும் கோ-2 இரகங்கள் பெரும்பாலும் எண்ணெய்க்காக பயன்படுத்தப்படுகிறது

இச்சூழலில், விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவிப்புத் திட்டம், கடந்த 21 ஆண்டுகளாக திண்டிவனம் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய நிலக்கடலை விலை மற்றும் சந்தை ஆய்வுகள் மேற்கொண்டது. ஆய்வுகளின் சந்தை மற்றும் விலை அடிப்படையில், பிப்ரவரி முதல் மார்ச் 2022 தரமான நிலக்கடலை பண்ணை விலை கிலோவிற்கு ரூ. 60 முதல் ரூ. 65 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003
தொலைபேசி -0422-2431405


**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**


பேராசிரியர் மற்றும் தலைவர்
எண்ணெய் வித்துக்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்-641 003.
தொலைபேசி எண் -0422-2450812

# Price Forecast for Oilseeds

## Coconut and Copra

India is the third major producer of coconut in the world. According to Ministry of Agriculture and Farmers Welfare, coconut was grown in 2.11 million hectares with a production of 14.94 million tonnes of nuts in 2019-20. Tamil Nadu stands second in the country in terms of coconut production after Kerala, accounting for 19 per cent of area and 24 per cent of production. Major coconut growing districts of Tamil Nadu are Coimbatore, Thanjavur, Pattukottai, Kanniyakumari, Vellore, Erode, Theni, and Krishnagiri.

The arrivals of copra to Perundurai market are from Krishnagiri, Dharmapuri, Salem, Madurai, Villuppuram, Pollachi, Pattukottai, Peravoorani, and Mysore (Karnataka). Fresh arrivals would be commencing from March-April months from various parts of the State and from Kerala and Karnataka also. The production of coconut is good due to favourable monsoon in major producing districts. Though production is good, price for coconut in this year is low compared to previous year as demand remained static due to pandemic situation.

The TN-IAM Project funded Price Forecasting Scheme of the Centre for Agricultural and Rural Development Studies, Tamil Nadu Agricultural University analyzed the past 21 years prices for coconut and copra that prevailed at Avalpoonthurai Regulated Market and Perundurai Cooperative Marketing Society of Erode district. As per the analysis, the farm gate price of good quality coconut will be around Rs. 26-28 per kg and good quality copra will be around Rs. 90-95 per kg during February-March, 2022 and price fluctuation would be subjected to the variations in the arrivals from the major production centres in Tamil Nadu and other States. Hence, farmers are advised to take selling decision accordingly.

**Gingelly**

As per first Advance Estimates of Ministry of Agriculture and Farmers Welfare, gingelly production in India during 2021-22 *kharif* was 6.72 lakh tones which is 2.28 per cent higher than the previous year. Majority of gingelly is grown as *Kharif* crop in central and southern parts of the country including Madhya Pradesh, Uttar Pradesh, Andhra Pradesh, Rajasthan, Gujarat, Maharashtra, Orissa, Karnataka and Tamil Nadu. In Tamil Nadu, Gingelly production was 36470 tonnes from 53010 hectares with a productivity of 688 kg/ha during 2019-20 (source: Indiastat). Gingelly is mostly cultivated as summer crop under irrigated conditions in Tamil Nadu.

According to the trade sources, gingelly arrivals to Tamil Nadu are from Gujarat, Andhra Pradesh, Rajasthan and Karnataka. Domestic arrivals are from Karur, Kodumudi, Mylambadi and from major areas of Trichy district. In Tamil Nadu, gingelly is sown during Karthikai pattam, Thai Pattam and Masi pattam. As per the trade sources, TMV 3 and TMV 4 are the varieties grown in Erode belt. Red gingelly shares the major area followed by black and brown gingelly even though all of them are used for oil extraction purpose only.

In this situation, TN-IAMP Price Forecasting Scheme implemented at the Centre for Agricultural and Rural Development Studies (CARDS), Tamil Nadu Agricultural University analyzed the past 21 year prices for Gingelly and Groundnut that prevailed in Sivagiri Regulated Market of Erode district. As per the results of the time series analysis, the farm gate price of good quality gingelly would be around Rs.98-100 /kg during February-March 2022. Hence, the farmers are advised to take sowing decision accordingly.

**Groundnut**

According to the first Advance Estimates of Ministry of Agriculture and Farmers Welfare, groundnut production in India during 2021 -22 *kharif* was 82.54 lakh tonnes which is 1.24 percent higher than the previous year. India exported groundnut to the tune of 6.64 lakh tonnes with the value of Rs.5,096.39 crore during 2019-20 to Indonesia, Vietnam and Phillipines. Gujarat, Rajasthan, Andhra Pradesh, Karnataka, Maharashtra and Tamil Nadu are the major groundnut growing State in India. These States contribute 89 per cent of groundnut production in the country.

According to Season and Crop Report of Tamil Nadu(2019-20) 10.33 lakh tonnes of groundnut was produced from 3.46 lakh hectares in Tamil Nadu during 2019-20. Major groundnut cultivating districts are Tiruvannamalai, Viluppuram, Vellore, Kanchipuram, Thiruvallur and Cuddalore. In Tamil Nadu groundnut is sown during July to August (Aadi pattam), January to February (Thai pattam) and May to June (Vaigasi pattam-Rainfed). As per trade sources, the area under groundnut is increased in all major growing districts due to remunerative price received for the seasonal crop. TMV10 (locally called Pattani) and Co2 are the major varieties preferred for oil extraction.

In this situation, TN-IAMP Price Forecasting Scheme implemented at the Centre for Agricultural and Rural Development Studies (CARDS), Tamil Nadu Agricultural University analyzed the past 21 year historical prices that prevailed in Tindivanam Regulated Market for groundnut. As per the results of the time series analysis and market survey, the farm gate price of good quality groundnut during harvest (February to March 2022) would be around Rs.60-65 per kg. Hence, farmers are advised to take up the sowing decision accordingly.

***For details contact***

*Domestic and Export Market Intelligence Cell*
*Centre for Agricultural and Rural development Studies*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone No: 0422-2431405*

***For technical details, contact***

*Professor and Head*
*Department of Oil Seeds*
*Tamil Nadu Agricultural University*
*Coimbatore - 641 003.*
*Phone No: 0422-2450812*